# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 32

[உறுப்பினர்களுக்கு மட்டும்]　　பதிவு: 135/83.

### தேவகுரு வியாழ பகவான்



தமிழினக் குருபீட அறிவிப்பு:

**தமிழினத் திருநாளான தீபாவளியைக் கொண்டாடுங்கள்**

காணிக்கை: ரூ 1-00　　வெளியீடு: 26 8 -1986

# புரட்சி மயங்கக் கூடாது

—சித்தர் கருவூரர்

[புரட்சி மயங்கக் கூடாது........என்னும் நூலிலிருந்து சில பகுதிகள்]

.........'புரட்சி' என்பது ஒரு கட்டழகுமிக்க இளம் கன்னிப்பெண் போன்றது. அதை நெடுங்காலம் மயங்கவைக்கக் கூடாது. அதையுணராமல் எந்த நாட்டு மக்கள் புரட்சியை கன்னியாகவே வைத்து அழகு பார்த்து களிப்புற்று கவிதைகளையும், கலை நிகழ்ச்சியையும், கட்டுரையையும், காப்பியமும் படைத்து வருகிறார்களோ அவர்கள் நெடுங்காலம் மானம், மரியாதை, உரிமை, நிம்மதி, நிறைவு, அமைதி, மதிப்பு, முதலிய அனைத்தையும் இழந்து தலை குனிந்து அடிமை வாழ்வு வாழ நேரிடும். இப் பேருண்மையை தெரியாதவர்களை விட புரியாதவர்களே அதிகமாக இருக்கிறார்கள். அதனால் தான் எத்தனையோ நாடுகளில் புரட்சிக்குரிய எல்லா சூழல்களும் கனிந்து பழுத்து உதிர ஆரம்பித்தும் கூட புரட்சி நிகழ கால தாமதம் ஆகிவிடுகின்றது. அதனால் கனிகள் அழுகிப் போகவும் தவறானவர்களால் திருடப்படவும் நேரிட்டு விடுகின்றது.

புரட்சியை தயங்கவோ; மயங்கவோ; வைக்க கூடாது. ஏனெனில் புரட்சி விரோதிகளும், துரோகிகளும். புரட்சியை போலித்தன்மையும் கூலித்தன்மையும் உடையதாக ஆக்கிவிடுவார்கள் அதன் மூலம் புரட்சியை ஒரு தொத்து நோய் என்று பிரகடனப்படுத்தி [Contagious Disease] அதை மருத்துவம் பார்த்தே ஒழித்து விடுவார்கள். இந்துயத் துணைக் கண்டத்திலும் வளர்ந்து வரும் முதலாளித்துவ நாடுகளிலும் இது தான் நடந்து கொண்டிருக்கின்றது.

நமது இந்தியத்துணைக் கண்டம் பல சமுதாய இயக்கங்களை நம்பி நம்பி ஏமாந்துவிட்டது. எந்த ஓர் இயக்கமும் நமது வரலாற்று திருப்பு மையத்தை உருவாக்கும் பணியினை கருவாக்கவே இல்லை. ஆனால் மக்களை கள்ளச் சந்தையின் மூலம் கொள்ளையடிப்போரும் உழைப்புக் கேற்ற ஊதியம் கொடுக்காமல் பாட்டாளி வர்க்கத்தை சுரண்டுகின்றவர்களும் அடிக்கடி புதிய புதிய பெயர்களில் இயக்கங்களை ஏற்படுத்தி மக்களை திசை திருப்பிக் கொண்டேயிருக்கின்றார்கள். இதனால் இல்லாமையும் கல்லாமையும், பற்றாமையும், வறுமையும் மிகுந்து பலநூறு ஆயிரக்கணக்கான மக்கள் நெருப்பில் விழுந்த புழுப்போல துடிதுடித்து மாண்டு கொண்டிருக்கிறார்கள். ஆண்டுகளோ ஓடி கொண்டிருக்கின்றன. இனியும் பொறுப்பதற்கில்லை என்று இந்து மதத்தின் இறைவர்களும், கடவுளகளும், தெய்வங்களும், தேவர்களும், இருடிகளும்......கூக்குரலிட்டு போர்க்கோலம் பூண்டு மக்களைக் காக்கப் புறப்பட்டு விட்டார்கள்.

நாம் விரும்புவது 'சமுதாயப் புரட்சி' மட்டுமே அதுவும் அறியாமையையும், அடிமைப் பண்பும் தன்னல வெறியும், சுரண்டல் போக்கும், ஆதிக்க மோகமும் அப்பாவித் தன்மையும் ஏமாளிப் போக்கும் மிகுதியாக உடைய இந்தியத் துணைக் கண்டத்தில் தொழில் புரட்சியோ, 'பொருளா தாரப் புரட்சியோ செய்வதன் மூலம் சமுதாயப் புரட்சியையும், அரசியல் புரட்சியையும் உருவாக்கவே முடியாது என்ற பேருண்மையைப் புரிந்தவர்கள் நாம். எனவே தான் நாம் மிக வெளிப்படையாக தனி மனித வாழ்வில் புரட்சியினை உருவாக்கிடல் வேண்டும். அதன் மூலம் நாடு தழுவிய பண்பாட்டு புரட்சியை உருவாக்கிடல் வேண்டும். அதன் பிறகு சாதி மத வட்டார இன வேறுபாடு இல்லா; 'சமுதாயப் புரட்சியினை' பொருளாதார சமத்துவத்தின் நோக்கமாக கொண்டு தோற்றுவித்து வளர்த்து முழுமையாக்கி அதன் மூலமே 'அரசியல் மறுமலர்ச்சி' யை உருவாக்குவதே நமது தெளிவான செயல் திட்டம். இது கம்யூனிசுடுகள் கூறுகின்ற வர்க்கப் போராட்டத்தினின்று வேறுபட்டது மாறுபட்டது என்பதை வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறோம் நாம். ஏனெனில் இந்த மண்ணுலகில் மனித இனம் தோன்றுவதற்கு முன்பே தோன்றி வளர்ந்த இந்து மதத்தையே முழுக்க முழுக்க நம்பி விரும்பி ஏற்றுக் கொண்டு ஒப்புக்கொண்டு புரட்சிக்கு புறப்பட்டு இருப்பவர் -கள் நாம்.

[தொடரும்]

# அன்புள்ள சேவுகனுக்கு.........!

## அருளுலகப் பயிற்சி முயற்சி தேர்ச்சி முறை விளக்கம்

அன்புச் சேவுக!

தாத்தாக்களும் ஆத்தாக்களும் அம்மையப்பன்கள் துணையோடு நிகழ்த்துகின்ற திருவிளையாடல்களுக்குக் காலப்போக்கில்தான்; செயல்முறையில் உரிய விளக்கங்கள் பெரிய அளவில் கிடைக்கின்றன. யாம், எந்த நொடியிலும், எதையும், எம் செயல் என்று எண்ணி விடாதிருக்கத் தாத்தாக்களும் ஆத்தாக்களும் எம்முடைய அன்றாட வாழ்வியல் நிகழ்ச்சிகளில் கூடத் தங்களின் விருப்பப்படியே முடிவுகளை வழங்குகிறார்-கள் அதாவது, 'ஊர் கூடி இழுக்கின்ற பெரிய தேருக்குச் சக்கரத்தடியிலேயே அமர்ந்து சிறிய முட்டுக்கட்டை போடுவது அவசியம்' என்பது போல, 'எண்ணற்ற அடியான்களும் அடியார்களும் சேர்ந்து இழுத்துச் செல்லும் எழுந்தருளிகள் அமர்ந்த அழகு செய்யப்பட்ட பெரிய தேராக இருக்கிறது எம்முடைய வாழ்க்கை.' இந்த வாழ்க்கைத் தேரின் சக்கரங்களுக்கடியிலே தொடர்ந்து முட்டுக்கட்டைகள் போடப்பட்டு வருகின்றன. அவை, நமது அடியான், அடியாள், அடியார் பயிற்சி முயற்சி தேர்ச்சிகளில் அவ்வப்போது ஏற்படுகின்ற தளர்ச்சி நிலைகள், அயர்ச்சி நிலைகள், தேக்க நிலைகள், முடக்க நிலைகள், வீக்க நிலைகள், கட்டுப்பாடற்ற நிலைகள், தோல்வி நிலைகள், நம்பிக்கையற்ற நிலைகள், அவசர ஆத்திர நிலைகள், பேராசை நிலைகள், 'நான்' என்ற அகம்பாவ ஆணவ விப்பு நிலைகள், அறியாமை நிலைகள், புரியாமை நிலைகள், தெரியாமை நிலைகள், உலகியல் மயக்க நிலைகள், ஒற்றுமையற்ற நிலைகள், ஒருமைப்பாடற்ற நிலைகள், நட்புணர்வற்ற நிலைகள், தோழமையுணர்வற்ற நிலைகள், தொண்டுணர்வற்ற நிலைகள், சமாதானப் போக்கற்ற நிலைகள், பிறரோடு ஒத்துப் போகத் தயாராக இல்லாத நிலைகள், பிற நக்கு விட்டுக் கொடுத்துப் போகத் தெரியாத நிலைகள்......என்று மிகப் பெரிய பட்டியலிட்டுக் காட்ட வேண்டிய வடிவங்களாகவே இருக்கின்றன என்பதை வெளிப்படையாகக் கூறிக்கொள்ள விரும்புகிறோம் யாம். ஏனெனில், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அடிப்படையான, உயிர் நாடியான, உள்ளீடான, மக்கள் தொடர்பு நிறுவனமான அருட்பணி விரிவாக்கத்திட்டத்தின் தலைமைச் செயலாளர் நீ நீயொருவன் எமது உணர்வு நிலைகளை முழுமையாகப் புரிந்து கொண்டால் போதும்; உன் மூலம் அனைவரும் புரிந்து கொள்வார்கள்.

நண்ப! யாம் இது காறும் தோன்றிய மற்ற அருளாளர்களைப் போல் முயன்றோ அல்லது திடீரென்றோ அருட்சத்தியையோ, சித்தியையோ, முத்தியையோ பெற்றவரல்ல. யாம், முக்காலமும் கடந்து, நிறைந்து, புரிந்து, அண்டபேரண்டங்களின் தொன்மைக்குச்சமமாக விளங்கும் பாரம்பரிய அருட் செல்வங்களைப் பெற்றிருக்கிறோம். எமது பதினெட்டாண்டு காலப் பயிற்சிகளும், பதினெட்டாண்டுகால முயற்சிகளும், கடலோடி, காடோடி, நாடோடி வாழ்வுகளும்; யாம், பாரம்பரியமாகப் பெற்ற அருட்செல்வங்களை எப்படியெப்படி உலகந்தழுவி வழங்க வேண்டுமென்ற வழிமுறைகளையும், நெறிகளையுமே வழங்கியிருக்கின்றன. யாம், அறிவு விழித்த நெறியிலேயே உலகியலின் சொந்த பந்தப் பாசங்களோடு இரண்டறக்கலந்த நிலையிலேயே பகுத்தறிவுப் போக்கிலும் விஞ்ஞானச் சூழலிலும் எமது பணிகளை ஆற்றி வருகிறோம். எமக்குக் கிடைத்துள்ள மிகப்பெரிய வெற்றி; விரல் விட்டு எண்ணினாலும் மாளாத அளவுக்கு அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் கிடைத்திருப்பது தான். இவர்கள், யாம் விரும்பும் தேவையான அளவிற்கு மேலேயே கிடைத்து விட்டார்கள் ஆனால் இவர்களுக்குள்; யாம், விரும்புகின்ற தகுதிகளை முழுமையாகப் பெற்றவர்கள் இன்னும் போதுமான அளவுக்கு எண்ணிக்கையில் உயரவில்லை! உயரவில்லை! உயரவில்லை! உயரவேயில்லை எனவே தான், யாம், இந்தத் தன்னிலை விளக்க (Self - Criticism) அஞ்சலைத் தீட்டுகிறோம். தொடர்ச்சி-6ம் பக்கம்

# சித்தர் இராமாயணம் - 4

அவரிடம், அவளுடைய தாயும் தந்தையும் இறக்கும் போது; 'அவள் வயிற்றில் பிறக்கப் போகும் வாரிசுதான் சூரியகுல அரியணையில் அமர்ந்து அரசாட்சி செய்ய வேண்டும்'; என்று வெளியிட்ட விருப்பத்தை நினைவுபடுத்தினர். மேலும், 'சீதைக்கு அவளுடைய வயிற்றில் வளரும் வாரிசை அவளுடைய தற்கொலையின் மூலம் அழிப்பதற்கு உரிமையில்லை; என்று வாதாடினர் இவற்றிற்கெல்லாம் மேலாக, 'அவள், அயோத்தி அரச குடும்பத்தாரை அரக்க குலத்தைச் சேர்ந்த தன்னுடைய வயிற்றில் தோன்றப்போகும் வாரிசு அடக்கி ஆளும்படிச் செய்தால்தான்; அவளுடைய வாழ்க்கை முழுமை பெறும்'; என்று எடுத்துக் கூறினர். இந்த இடத்தில் விசுவாமித்திரர் அகலிகையைப் பற்றிக் குறிப்பிடுகிறார் இந்த அரிய செய்தி; சித்தர் இராமாயணத்தில் மட்டுமில்லாமல் வேறு சில இராமாயணங்களிலும் குறிக்கப்படுகிறது அதாவது, 'கல்லாகக் கிடந்த அகலிகை இராமனின் கால் பட்டுத்தான் மீண்டும் பெண் வடிவு பெற்றாள் என்றாலும்; இராமன் சீதையை நெருப்பில் முழ்கி வருமாறு ஆணையிட்டதைக் கேட்டுப் பெண்ணினத்தையே இழிவு படுத்தும் இந்த இராமனின் கால்பட்டுத் தான் பெற்ற பெண் வடிவைவிடுத்து மீண்டும் கல்லாகவே மாறிவிட்டாள்'; என்ற நிகழ்ச்சியைச் சீதையிடம் அழகுபட விளக்கியுரைத்துத்தான்; விசுவாமித்திரர், 'அவள் வயிற்றில் வளர்ந்த இராமனின் வாரிசை அழித்து விடாமல்; அந்த வாரிசைக் கொண்டே இராமனுக்கும், மற்ற அயோத்தி அரச குடும்பத்தார்க்கும் பாடம் புகட்ட வேண்டும்' என்ற வெறியுணர்ச்சியை வளர்த்தார். இவரே, விரைந்து ஆள் மூலம் இலங்கைக்குச் செய்தியனுப்பித் திரிசடையும், சூர்ப்பனகையும் தங்களுடைய குலச்செல்வி சீதையைத் தேடி அயோத்தி மாநகருக்கு வருமாறு செய்தார். சீதையைத் தேடிவந்த சூர்ப்பனகையும் திரிசடையும் சீதைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், பாகாப்புகளையும் தரச் செய்தார்

மேலும், சீதைக்குப் பிறந்த இலவகுசர்கள் எனும் இரண்டு சிறுவர்களையும் 9 வயதுக்குள் அரக்கர் குலத்துக்குரிய அனைத்து விதமான மாயப் போர்களைச் சூர்ப்பனகை மூலமும், திரிசடை மூலமும் கற்றுக் கொள்ளச் செய்தார். இதேபோல அரச குலத்துக்குத் தேவையான ஏட்டறிவையும், பட்டறிவையும், போர்ப் பயிற்சிகளையும் வால்மீகி மூலமும், யக்ஞவல்லி மூலமும், தன் மூலமும் கற்றுக்கொள்ளச் செய்தார் இதற்கிடையில், இலவகுசர்களைப் பல முறை இலங்கைக்குச் சென்றுவரச் செய்தார். இலங்கையிலிருந்த அரக்கர் குல இளைஞர்களையெல்லாம், இலவகுசர்களுக்கு ஆதரவாகப் போரிடக் கூடியவர்களாக அயோத்தியைச் சுற்றியுள்ள காடுகளில் கொண்டு வந்து தங்கச் செய்தார். அவரே, அயோத்தி அரச குடும்பத்தாருடன் தொடர்ந்து 48 மாதங்கள் போரிட்டு ஒவ்வொருவராகக் கொன்று இறுதியில் இராம லக்குவனார்களையும் சரயு நதியில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளும்படிச் செய்யுமாறு செய்தார். அதாவது, இராமனும் இலக்குவனும் தற்கொலை செய்து கொள்ளும் போது அவர்களுக்கு வயது 64 அதாவது, இலவகுசர்கள், தங்களுடைய பத்தாவது வயதில் இலங்கையிலிருந்து வந்த அரக்கர்களின் படையின் துணையோடு திரிசடையையும், சூர்ப்பனகையையும் மாயப் போர்களுக்குத் தலைவர்களாக நியமித்து; அயோத்தி அரசின மீது போர் தொடுத்தார்கள். திடீர் திடீரென்று அயோத்தி நகரையும், சுற்றுப் புறங்களையும், அரண்மனையையும் தாக்கிப் பகுதி பகுதியாக அழித்தொழித்தார்கள்

அதாவது, 'நேரடியான போரில் ஈடுபட்டால்; இ ரா ம ன் தங்களுடைய தாத்தாவான இராவணேசுவரனையும் அவனது சேனையையும் சூழ்ச்சியாக அழித்தது போல்; தங்களையும் அழித்து விடுவான்; என்று எண்ணி ஆரம்பத்திலிருந்து இறுதி வரையில் மறைந்திருந்தே திடீர் திடீரென்று வெவ்வேறிடங்களில் தாக்குதல் நிகழ்த்தி பெரிய அழிவுகளை உண்டாக்கி விட்டுக் காட்டுக்குள் ஓடி ஒளிந்து கொள்ளும் [*தேவலோகத்தில் வாழும் அரக்கர்கள்] *அசுரரின் போர் முறையைக் கையாண்டான். (இன்றைக்கு, இந்தப் போர் முறை 'கொரில்லாப் போர் முறை' என்று குறிக்கப் படுகிறது) இப்படிச் சிறுகச் சிறுக அயோத்தி அரசின் வளத்தையும், வலிமையையும், அரச குடும்பத்தார்களையும், அவர்களின் செல்வத்தையும், செல்வாக்கையும் சிதைத்துச் சீரழித்ததன் மூலமே!; இலவகுசர்கள் இராமனையும் இலக்குவனையும் தனிமைப்படுத்தி; இக்கடைசி போரில் முழு மையாகத் தோற்கடிக்க முடிந்தது. ஆனால், இலவகுசர்கள் இராமனையும், இலக்குவனையும் உயிரோடு கைதிகளாகச் சிறைப் பிடித்துக் கொண்டு வருவதாகத் தங்களின் தாய் சீதைக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. இராம லக்குவனர்களின் தற்கொலைக் கேட்டு; அதிர்ச்சியடைந்த 80 வயதான 'சீதை, தன் மக்களை வால்மீகியிடமும், யக்ஞவல்லியிடமும் திரிசடையிடமும், சூர்ப்பனகையிடமும் ஒப்படைத்து விட்டு; தனது சிறிய தந்தை வீடணனின் கால்களைத் தொட்டு வணங்கி விட்டுத் தன்னுடைய கற்பின் வலிமையினால் நிலத்தை இரண்டாகப் பிளக்கச் செய்து; அதற்குள் இறங்கி மறைந்து நிறைந்தாள். சீதை நிலத்துள் மறைந்த இடம் இன்றைக்கும் அயோத்திக்கு அருகில் இருக்கிறது. சீதை மிகச் சிறந்த கற்புக்கரசியாக வாழ்ந்த காரணத்தினால் தான்; அவளும், அவள் கணவன் இராமனும், அவளுடைய தாய் தந்தையரான வண்டமர் குழலியும், இராவணனும், தம்பி மேகநாதனும், சித்தப்பா கும்பகர்ணனும் அவளீன்ற மகன்களான இலவ குசர்களும் வாழ்ந்த வாழ்க்கை இராமாயணக் காப்பியமாக, இதிகாசமாக, கதையாக நிலையாக வடிவம் பெற்றது.

(தொடரும்)

---

# குருநிலையும் ஒன்பது கோள்களும் - 3

ஒன்பது கோள்களில் சுக்கிராச்சாரியார், வியாழபகவான் எனப்படும் இருவரே குருநிலை பெற்றவர்கள் இராகுவும், கேதுவும் 'தேவன்' என்ற சிறப்பைப்பெற்றவர்கள். திங்களங்கிழவன், செவ்வாய்க்கிழவன், புதன் கிழவன் என்று மூவர் உரிமைப் பட்டம் பெற்றவர். சனீசுவரன் என்ற இவன் ஈசுவரப்பட்டம் பெற்றவன். சூரியன், அனைத்துப்பட்டங்களுக்கும் அப்பாற்பட்டவன். இந்தப்பட்டங்களுக்கேற்பவே, இவர் -களுடைய ஆற்றல் நிலை, ஆட்சி நிலை, பயன், இயக்கம்..........முதலியவை கண்டு பிடிக்கப்படுகின்றன. இவற்றை, இங்கு குறிப்பதற்குக் காரணமென்ன வென்றால்; (60) அறுபதாண்டுகளின் தமிழ்ப் பெயர்களைப் பிருமணர்கள் சமசுகிருதத்தில் மாற்றினார்கள்; மாதங்களின் பெயர்களையும், நாட்களின் பெயர்களையும் கூடச் சமசுக்கிருத மொழிப்படி திருத்தியும், மாற்றியும் செயல்பட்டார்கள். அதனால், பல அரிய பெரிய பொருளாழமிக்க அழகான தமிழ்ச் சொற்கள் மறக்கடிக்கப்பட்டன, மறைக்கப்பட்டன எனவே, வானியலிலும், விண்ணியலிலும், இவை சார்ந்த கலை -களிலும் மிகப்பெரிய இழப்புக்கள், அழிவுகள், நலிவுகள் திசைதிருப்பல்கள், மயக்கங்கள், குழப்பங்கள், தவறுகள், தேக்கங்கள்.........விளைந்திட்டன. இந்தக் கேடுகளால், பதினெண் சித்தர்களின் மெய்யான இந்து மதம் சிதைந்து சீரழிந்து பயன் குன்றிச் செல்வாக்கிழந்தது; அதே நேரத்தில், பிருமணர்களின் பயனற்ற பொய்யான ஹிந்து மதம் செழித்து வளர்ந்தது. எனவேதான், சமசுக்கிருத மொழி யையும், பிருமணரின் கருத்துக்களையும், கடுமையாக எதிர்க்க வேண்டிய கட்டாயமும், அவசியமும் ஏற்பட்டுவிட்டது.

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

நண்ப! நமது சித்தர் நெறிப்படி எல்லோரும் இல்லற வாழ்வு வாழ்ந்தே தீர வேண்டும். எல்லோருமே சொந்த பந்தப் பாசப் பிணைப்புகளோடுதான் வாழ வேண்டும். இந்த அடிப்படைக் கருத்தில்; யாம், எள்முனையளவு கூட மாற்றத்தை ஏற்படுத்தவில்லை, ஏற்படுத்தவில்லை. ஆனால், எம்மால் உருவாக்கப்பட்டு வருபவர்களில் சிலர் சொந்தபந்தப் பாசங்களை மறந்தவர்களாகவும், சிலர் துறந்தவர்களாகவும் சிலர் மறுத்தவர்களாகவும், சிலர் வெறுத்தவர்களாகவும், சிலர் ஒதுக்கியவர்களாகவும், சிலர் பதுக்கியவர்களாகவும், சிலர் புதுக்கியவர்களாகவும்.........இப்படிப் பல நிலையில் இருக்கிறார்கள். இதற்கு யாம் எந்த நிலையிலும் காரண காரியமாகக் கருதப்பட்டு விடக் கூடாது, கருதப்பட்டுவிடக் கூடாது, கருதப்பட்டுவிடக் கூடாது, கருதப்பட்டு விடவே கூடாது, ஏனெனில், 'யாம், எக்காரணம் பற்றியும் எவருடைய சாபத்தையும் பெறக் கூடாது பெறக் கூடாது, பெறக் கூடாது, பெறவே கூடாது அதாவது, எம்மிடம் வருபவர்கள் அவரவரின் ஊழ்வினைக்கும், வினைக்கும், ஆள்வினைக்கும், சூழ்வினைக்கும், நாள்கோள் மீன் பாதிப்புக்கும் ஏற்பவே மேலே பட்டியலிட்டுக் காட்டியது போல் பலவகையான உறவு நிலைகளையும், துறவு நிலைகளையும் பெற்றிடுகிறார்கள்.' இப் பேருண்மையினை மற்றவர்கள் புரிந்து கொள்ளாவிட்டாலும் பாதகமில்லை; நம்மவர்களாவது முழுமையாகவும், முறையாகவும், தெளிவாகவும், விளக்கமாகவும் புரிந்து கொண்டேயாக வேண்டும் இல்லாவிட்டால், உலகெங்கும் தோன்றி மறைந்த எண்ணற்ற மதங்களைப் போல, அல்லது அருள் இயக்கங்களைப் போல, அல்லது அருளாளர்களின் சாதனைகளையும் போதனைகளையும் போல; யாமும் எமது சாதனைகளும், போதனைகளும்; எம்மால் உருவாக்கப்படும் திருவனைக் கட்டமைப்புக்களும், நிர்வாக ஒழுங்கமைப்புக்களும், மங்கி மறைந்திட நேரிடும். இதற்காகத்தான் யாம், கற்றுத் தேர்ந்த நல்லிளைஞர்களையே மிகுதியாகத் தேர்ந்தெடுத்துத் தயாரித்து வருகிறோம் எனவே, நம்மவர்களின் பயிற்சி நிலைகளையும், முயற்சி நிலைகளையும், தேர்ச்சி நிலைகளையும், ஒரு மின்னல் வேகக் கண்ணோட்ட ஆய்வு (A lightning Research Approach or Review) செய்யும் வண்ணம் இந்த அஞ்சல் எழுதுகிறோம்.

நண்ப! யாம், எமது திறமையால் யாரையும் உய்த்ததாக எண்ணவில்லை, எண்ணவில்லை, எண்ணவில்லை, எண்ணவேயில்லை அதனால் தான், யாம அரிதில் முயன்று உருவாக்கிய பேராற்றல் மிக்க அருட் கலைஞர்கள்; காட்டாற்று வெள்ளம் போல் கட்டுப்பாடில்லாமலும், பொறுப்பில்லாமலும், எமது சட்டதிட்டக் கட்டுப்பாடுகளின்படி செயல்படாமலும், திருவனக்கட்டமைப்புக்களை உருவாக்குவதில் ஆர்வம் காட்டாமலும், நிர்வாக ஒழுங்கமைப்புக்களை விரும்பாமலும் தான் தோன்றிகளாகச் செயல்பட்டு; மிகப் பெரிய தோல்வி நிலைகளையும், தேக்க நிலைகளையும், பயனற்ற நிலைகளையும் உண்டாக்கி விட்டார்கள் உண்டாக்கி விட்டார்கள், உண்டாக்கி விட்டார்கள். இப்படிப் பட்டவர்களைத் திருத்துவதற்காக எழுதப்பட்ட நலம் பாராட்டுத் திருவோலைகளும், செயல் விளக்க மடல்களும், கண்டிப்புக் குருவாணை அஞ்சல்களும் ஏறத்தாழப் பயனற்றுப் போய்விட்டன, பயனற்றுப் போய்விட்டன, பயனற்றுப் போய்விட்டன, பயனற்றே போய்விட்டன ஏனென்றால் யாம் வியந்து வியந்து பாராட்டிப் பூரித்துப் பெருமையடையும் அளவிற்கு மிகப் பெரிய சித்தி நிலைகளைப் பெற்ற சிலர் நம்மிடையே வாழுகிறார்கள் இவர்கள் அனைவருமே தங்களுடைய தகுதிகளை அறியாமலும், குருமொழி கேளாமலும், சட்டதிட்டக்கட்டுப்பாடிற்கு உட்படாமலும் செயல்படுவதால் தான்; நமது வளர்ச்சி குடத்துக்குள் ஏற்றி வைத்த விளக்காகவே இருக்கிறது. இவர்களைத் திருத்துவது எம கையில் இல்லை! இல்லை! இல்லை! இல்லவேயில்லை!!! எனவே, இவர்களையெல்லாம், இவர்களின் போக்கிலேயே விட்டுவிட்டோம் யாம. அடுத்த நிலையில் நம்மவர்களுக்கிடையில் படித்துப் பட்டம் பெற்றவர், பட்டம் பெறாதவர், வேலைபார்த்துச் சம்பாதிப்பவர், சம்பாதிக்காதவர் பணக்காரர், ஏழை, செல்வாக்கான குடும்பத்தவர், சாதாரண குடும்பத்தவர், உயர்சாதிக்காரர், தாழ்ந்த சாதிக்காரர், என்ற வேறுபாடுகளும் மாறுபாடுகளும், முரண்பாடுகளும, போட்டி பொறாமைகளும் பேய்க்காற்றுப்போல் தலைவிரித்தாடுகின்றன. இவற்றால்தான், உலகாண்ட தமிழினம் இருந்த இடம் தெரியாமல் இருக்கிறது; உலகாண்ட மெய்யான இந்து மதம் அடையாளம் கண்டுபிடிக்க முடியாத அளவிற்குச் சிதைந்து சீர்குலைந்து எண்ணற்ற கற்பனை வடிவங்களைப் பெற்றுக்கிடக்கிறது; அண்ட பேரண்டமாளும் அருளுலகத் தமிழ்மொழி தனது மக்களாலேயே இழிக்கப்பட்டும், பழிக்கப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும், அடிமையாக்கப்பட்டும் அனாதை நிலையில் நாதியற்றுக்கிடக்கிறது. இவற்றிற்கெல்லாம் பரிகாரமாகத்தான்; அருளுலக அரியணையில் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடமாக அறிவு விழித்த நிலையில், திருவோலக்கத்திலும் நாளோலக்கத்திலும் அமர்ந்து அருளாட்சி நடத்தி வருகிறோம் யாம். அதாவது யாம், இலைமறைகாயாகவே இருந்து கொண்டு, எம்மால் உருவாக்கப் படுபவர்களின் மூலமே உலகைச் சந்தித்துச் செயல்பட்டு வருகிறோம்.

(தொடர்ச்சி அடுத்த அறிக்கையில்)

5-ம் பக்கத் தொடர்ச்சி

பிருமணர்களும் சேர்ந்தே பொய்யான ஹிந்து மதத்தால் பாதிப்பும், பயனின்மையும், ஏமாற்றமும், கேடும் அடைகிறார்கள். எனவேதான், பொய்யான ஹிந்து மதத்தை அகற்றும் பணியும், மெய்யான இந்து மதத்தை வளர்க்கும் பணியும் சேர்த்தே நிகழ்த்தப்படுகின்றன இதைப் புரியாதவர்கள், சித்தர் நெறி பிருமண வெறுப்பையும் சமசுக்கிருத மறுப்பையும் கண் மூடித்தனமாக வளர்ப்பதாகக் குறைகூறிக் குற்றம் சாட்டுகிறார்கள்.

பிருமணர்கள் செய்த மிகப்பெரிய சதிகளில், சூழ்ச்சிகளில், தவறுகளில், புரட்டுக்களில், குழப்பங்களில் மிகப்பெரியது ஆண்டின் பிறப்பு தை மாதமாக இருந்ததை மாற்றியதும்; வாரத்தின் ஏழு நாட்களின் வரிசையை மாற்றியதும்;, நாள், கோள், மீன், மாதம், ஆண்டு... ... முதலியவைகளின் பெயர்களை மாற்றியதுமேயாகும். விரிவஞ்சி இவை பற்றி அதிகமாக இதில் எழுதவில்லை

வியாழ பகவான் எனப்படும் தேவகுருவையே வாரத்தின் ஆரம்பமாகவும்; சுக்கிராச்சாரியார் எனப்படும் வெள்ளியையே வாரத்தின் கடைசியாகவும் கொண்டு தான், வாரத்தின் ஏழு நாட்களை வரிசைப்படுத்தினார்கள் பதினெண் சித்தர்கள். அதாவது, மெய்யான இந்துமதப்படி வாரத்தின் ஏழு நாட்கள்:-

1 வியாழன் — தேவகுரு — வியாழபகவான் — (Jupitor)
2. சனி — சனீசுவரன் — (Saturn)
3. சூரியன் — ஞாயிறு — (Sun)
4. புதன் — புதனங்கிழவன் — (Mercury)
5 செவ்வாய் — செவ்வாய்க்கிழவன் — (Mars)
6 திங்கள் — திங்களங்கிழவன் — சந்திரன் — (Moon)
7. வெள்ளி — சுக்கிராச்சாரியார் — (Venus)

என்றிப்படித்தான், வாரத்தின் ஏழு நாட்கள் கணிக்கப்பட்டுக் கணக்கிடப்பட்டு வழக்காற்றில் இருந்திருக்கின்றன இந்த வரிசைதான் மனிதனுடைய உள்ளங்கை அமைப்பை விளக்கும் 'வரியியல்' (The Palmistry) என்ற விஞ்ஞானத்தில் உள்ளது. அதாவது கைரேகைப் பதிவு இலக்கணமும், விஞ்ஞானமும் இப்படியே உள்ளன

மேற்படி வரியியல் விஞ்ஞான விளக்கத்தின் மூலம் பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதப் வாரத்தின் ஏழு நாட்களைத் தேவகுருவில் 'வியாழக்கிழமை' ஆரம்பித்து; அசுர குருவில் 'வெள்ளிக்கிழமை' முடித்திருக்கும் பேருண்மையை அனைத்துத் துறையினரும், மதத்தினரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்! ஆராய்ச்சி செய்ய வேண்டும்! இந்தக் குழப்படியால், திருத்தத்தால் பிருமணர் அடைந்த நன்மைகள் என்னென்ன? எவையெவை? எப்படியெப்படி?......??? என்று முறையாகவும், முழுமையாகவும் ஆராய்ந்தால்தான்; பதினெண்சித்தர்களின் 'சித்தர் நெறியான' 'மெய்யான இந்துமதம்' எப்படியெப்படிச் சிதைத்துச் சீரழிக்கப்பட்டுப் பிருமணரின் பொய்யான ஹிந்துமதம் செழித்து வளர்க்கப்பட்டது என்ற பேருண்மை விளங்கிடும்.

வாரத்தின் ஏழுநாட்களும் 'குரு'வையே முதலாகவும், முடிவாகவும் பெற்றிடுமாறு அமைக்கப்பட்டதற்குத் தத்துவ விளக்கமும், சித்தாந்த விளக்கமும் விஞ்ஞானப் பூர்வமாக உண்டு எனவேதான், பதினெண் சித்தர்கள் தங்களின் மெய்யான இந்து மதத்தில், 'அனைத்தும் குருவழிக் காண்க'; 'குருவில்லா வித்தை பாழ்'; 'குருவே திரு' 'குருவும் திருவுமே கருவாவர்'; 'குருவே எல்லாம்'; 'குரு வாழ்க'; 'குருவே துணை'; 'குருவே வழி, விழி, வழிகாட்டி, வழிப்பயன்'; 'குருவைப் பெற்றால் திருவைப் பெற்றிடலாம்';...... என்று அனைத்துக்கும் குருவையே மூலமாக, முதலாக, உள்ளீடாக, உயிராக, உறுதுணையாக,...... அமைத்துள்ளார்கள்

—தொடர்ச்சி 11-ம் பக்கம்

# காலடி ஆதிசங்கராச்சாரியாரின் திருவுருவத் தோற்றம்

பிற்காலச் சோழப் பேரரசின் [கி பி. 785-1040] தந்தையான பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் மகன் கருவூர்த் தேவருக்கும். முதலாம் இராசேந்திர சோழன் மகளுக்கும் பிறந்த திருமாளிகைத் தேவர் எழுதிய குருபாரம்பரிய வாசகங்களில் காலடி ஆதிசங்கராச்சாரியாரியார் பற்றிய குறிப்புக்கள் நிறைய இருக்கின்றன.

திருமாளிகைத் தேவர் தமது குருபாரம்பரிய வாசகங்களில்; காலடி ஆதிசங்கராச்சாரியார் ஒரு தமிழர்; இவர் கருணீக்க சைவ வேளாள குலத்தில் தோன்றியவர்; இவரது முன்னோர்கள் சீர்காழியில் உள்ள சிவன் கோயிலில் பணியாற்றி வரும் சிவாச்சாரியார்களேயாவார்கள் அதாவது, இவர் சீர்காழிச் சிவாலயத்தில் உள்ள குரு, குருமார், குருக்கள், அந்தணர், ஆச்சாரியார்......என்ற அருளுலகப் பட்டங்களைப் பெற்றிட்ட சைவ வேளாள மரபில் தோன்றியவர். இவர் ஆலமர் கடவுட் புதல்வனுன் முருகப் பெருமானின் திருத்தோன்றலாக, பதிலியாகப் பிறப்பெடுத்த சமயக்குரவர் திருஞானசம்பந்தரின் மறுபிறப்பாகத் தோன்றியவரேயாவார். இவர் சிவனின் தோன்றலாகவோ, வடிவாகவோ, அல்லது பதிலியாகவோ தோன்றவில்லை, தோன்றவில்லை,தோன்றவில்லை,தோன்றவேயில்லை. இவர், தமிழ்மொழியில் மிகுந்த ஆழமான புலமை பெற்ற பிறகே பதினெண் சித்தர்களின் மெய்யான இந்து மதத்திற்குரியவைகளைப் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் சமசுக்கிருத மொழியில் மொழிபெயர்த்து பல இலக்கியங்களை உண்டாக்கினர் இவர் பதினெண் சித்தர்களின் அருளுலக இலக்கண இலக்கியங்களின் படி உச்சிக் குடுமியாராகத் தாடிமுடியுடன் வாழ்ந்தார். இவர், தனக்கு முன் தோன்றி வாழ்ந்திட்ட 81 ஆதி சங்கராச்சாரியார்கள் அந்தணர் வடிவிலே வாழ்ந்து வெள்ளாடை மேனியராக, உச்சிக்குடுமியராக, நூல் அணிந்தோராக, மாந்தரீக வல்லியாக, தாந்தரீகச்சித்தியாளராக, வேதசித்தராக விளங்கியது போலவே தானும் விளங்கினர். இவர் திருமந்திரத்தையும், திருக்குறளையும் தமது கண்ணெனப் போற்றினர் என்பதாலும்; இவர் திருமந்திரம் கூறும் அந்தணர் தோற்றத்தை யேபெற்றிருந்தார்.

''நூலும் சிகையும் நுவலிற் பிரமமோ
நூலது கார்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலுடை அந்தணர் காணும் நுவலிலே''

[திருமந்திரம் — 230]

இதன்படி இவர் உச்சிக்குடுமியராகவும், பூனூல் அணிந்தவராகவும், வெள்ளாடை மேனியராகவும், திருநீறு குங்குமம், சாந்து, சந்தனம், மஞ்சள், எனும் ஐந்தினையும் அணிந்தே திருக்கோலக் காட்சியினராக அல்லது திருக்கோல வடிவினராக விளங்கினர் என்ற பேருண்மைகள் தெளிவாகத் தெரிகின்றன. ஆனால், இவர் மொட்டையடித்துக் கொண்டு காவி கட்டிக் கொண்டு பூனூல் இல்லாமல் திருநீறு மட்டும் பூசிக்கொண்டு காட்சியளித்ததாக நான்கு மடத்து மடாதிபதிகளும பிருமண சந்நியாசிக் கோலத்தில் வாழ்ந்து காட்டுகிறுர்கள். இதனை ஏமாளிகளான, அப்பாவிகளான எனது தாய் நாட்டு மக்கள் நம்புகிறுர்கள் இதற்கென்ன செய்வது? என்னுல் முயன்றவரை என் தாத்தாவின் குருவாக்கு குருவாக்கியம், குருவாசகம், குருபாரம்பரியம் எனும் நான்கிலிருந்தும் எண்ணற்ற வாசகங்களைச் சான்ருகவும், ஊன்ருகவும் எடுத்துக் காட்டி உண்மையை விளக்கினுலும் நம்புவாரில்லை.

'காலடி ஆதிசங்கராச்சாரியார் ஒரு தமிழன் தான்' என்ற கருத்து எப்படி முழுமையாகவும். முதன்மையாகவும விளக்கியுரைக்கப் பட்டிடல் வேண்டுமோ; அதை விட மிக மிக முழுமையாகவும, முதன்மையாகவும் விளக்கியுரைக்கப் பட வேண்டிய செய்திஎன்னவென்ருல்; அது, ஆதிசங்கராச்சாரியார் மொட்டையடித்துக் கொண்டு, காவி கட்டிக் கொண்டும், குங்குமம், சாந்து, சந்தனம், மஞ்சள் அணியாமல் திருநீறு மட்டும் அணிந்தும்பூனூல் இன்றியும், பிருமண சந்நியாசிக் கோலத்தில் வாழ்ந்தார். என்பதை மறுப்பதேயாகும்.

ஏனெனில், பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதப் படி சந்நியாசிகளே கிடையாது, கிடையாது, கிடையாது, கிடையவே கிடையாது. எனவே, காலடி ஆதி சங்கராச்சாரியாருக்கு ஒரு சந்நியாசிக் கோலத்தை வழங்கித்தான் இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள் அவரைத் தங்களுடைய பிருமணப் பீடாதிபதியாக, குருவாக ஆக்கிக் கொண்டார் என்பது வெளிப்படுத்தப் படவேண்டிய ஒன்றாக இருக்கிறது.

பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்களின் வேதமதத்துக்கும், வேத நாகரீகத்துக்கும், சமசுக்கிருத மொழிக்கும் மூலாதாரமாக, ஆரம்பமாக அடிப்படையாக, குருவாக, குருபீடமாக, தலைமையாக விளங்குவது காலடி ஆதிசங்கராச்சாரியார்தான். இவருக்கும் இந்தப் பிருமணர்களுக்கும், பிருமண வேதமதத்துக்கும், சமசுக்கிருதத்துக்கும் சம்பந்தமில்லை, சம்பந்தமில்லை, சம்பந்தமில்லை, சம்பந்தமேயில்லை என்ற கருத்தை முடிவாகவும் தெளிவாகவும் வலியுறுத்தி விளக்கியுரைப்பதின் மூலம் தான் பிருமணருடைய பொய்யான ஹிந்து மதத்தை முறியடிக்க முடியும், முறியடிக்க முடியும், முறியடிக்க முடியும். அதாவது, பதினெண் சித்தர்களின் மெய்யான இந்து மதத்திற்கு மறுமலர்ச்சி வேண்டுமென்றால் இந்த மெய்யான இந்துமதத்தின் கருத்துக்களையும், செய்திகளையும்தான் காலடி ஆதிசங்கராச்சாரியார் சமசுக்கிருத மொழியில் சுருக்கி எழுதினார் என்ற பேருண்மையை விளக்கியுரைத்து அனைவரும் புரியும் வண்ணம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் வட ஆரிய மாயை அகலும்; வேதமத இருள் அகற்றப்பட்டிடும், பிருமண ஆதிக்கம் ஒழிக்கப்பட்டிடும், சமசுக்கிருத மொழியின் மோகம் தணிக்கப்பட்டிடும், பிருமணச் சாத்திரிகளின் சுரண்டல்கள் தடுக்கப்பட்டிடும், தடுக்கப்பட்டிடும், தடுக்கப்பட்டிடும்......' என்ற திருமாளிகைத் தேவரின் குருபாரம்பரிய வாசகங்கள் கூட அன்றிலிருந்து இன்றுவரை தமிழர்களின் அறியாமையை அகற்றவில்லை. அடிமைப்புத்தியை நீக்கவில்லை, பொய்யான ஹிந்து மதத்தின் மாயைகளிலிருந்து தமிழரை விடுவிக்கவில்லை.

எனவேதான், மோகனூர் உருத்திரம் பிள்ளையும், கண்டப்ப கோட்டைச் சித்தர் ஏனம்பட்டியாரும் திருமாளிகைத் தேவர் அவர்களின் வாசகங்களையே கொள்கை விளக்கங்களாகவும், குறிக்கோள் வாசகங்களாகவும் பயன்படுத்தி மெய்யான இந்து மதத்தின் விடுதலைக்காக இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள். ஆனால், இந்த இரண்டு நூற்றாண்டுக்குள்; ஆங்கிலேயரின் தயவால் கும்பகோணத்துச் சங்கர மடத்துத் தலைவர், காஞ்சி காமாட்சியம்மன் கோயில் அறங்காவலர் பொறுப்பை பெற்றதன் மூலம் காஞ்சியிலும் ஓர் ஆதிசங்கராச்சாரியார் மடத்தை உருவாக்கிவிட்டார். அதாவது, ஆதிசங்கராச்சாரியார் என்ற பெயரைத்தான் பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள் தங்களுடைய கோட்டையாகவும், கோட்டையின் பாதுகாப்பு அரணாகவும், தங்களைப்பாதுகாக்கும் கவசமாகவும், கேடயமாகவும், எதிரியைத் தாக்கும் போர் ஆயுதமாகவும் பயன்படுத்துகிறார்கள், பயன்படுத்துகிறார்கள், பயன்படுத்துகிறார்கள். அதாவது இன்னும் சிறிது காலம் போனால்; இமயமலைக்குச் சென்று நிறைவெய்திய காலடி ஆதிசங்கராச்சாரியார் இந்தக் காஞ்சீபுரம் காமாட்சியம்மன் கோயிலில்தான் மறைந்தார் என்று கதைகட்டி விட்டால் கூட நமது அப்பாவித் தமிழர்கள் நம்புவார்கள், நம்புவார்கள், நம்புவார்கள். எனவேதான், பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதத்திற்கும், இந்தப் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்களின் பொய்யான ஹிந்து மதத்திற்கும் இடையே நிகழ்ந்து வரும் அனைத்து வகையான போட்டா போட்டிகளையும், போர்களையும், சண்டைச் சச்சரவுகளையும், விளக்குகின்ற மறுமலர்ச்சிப் பணிக்கு மையமாகவும், அடிப்படையாகவும், உள்ளீடாகவும், உட்கிடக்காகவும், கொள்கையாகவும், குறிக்கோளாகவும் இருக்க வேண்டியது தென் பாண்டித் தமிழனான காலடி ஆதிசங்கரனுடைய வரலாறும், வாழ்வியல் சாதனைகளும், போதனைகளும்தான் என்ற கருத்து திருமாளிகைத் தேவர் முதல் யாம் வரை வலியுறுத்திக் கூறப்படுகின்றது.

—தொடரும்



# இந்தியாவில் மார்க்சீயம் — 14

—சித்தர்

இயற்கையின் இயங்குவியல் நூல் கார்ல் மார்க்சின் சித்தாந்தங்களுக்கு நல்லதொரு பக்கத் துணையாக அமைந்தது. இந்நூலை மார்க்சீயத்தின் விமர்சன உயிர் நாடி என்றுகூட கூறலாம். இந்நூலை எழுதும்போதே எங்கெல்சு தனதுஉணர்வுகளை, சிந்தனைகளை பலகட்டுரைகளாக எழுதி ‘உழைப்புப்பதாகை’ என்ற பிரிட்டிசுத் தொழிற் சங்கங்களின் பத்திரிக்கையில் வெளியிட்டார். அது அவருக்குத் தேவையான ஆர்வத்தையும் ஆதரவையும் தேடிக் கொடுத்தது.

2-12-1881 ஆம் நாள் கார்ல் மார்க்சை விட்டு அவருடைய மனைவி பிரிந்தார் அவ்விறப்பு அவரது வாழ்வின் மிகக் கடுமையான தாக்குதல்களில் ஒன்றாகும் அத்தாக்குதலை உணர வேண்டுமேயானால் சவ அடக்கத்தின் போது எங்கல்சு கூறிய சொற்கள் கொண்டு உணரலாம் ‘மிகத் தெளிவான விமர்சன ரீதியான ஒரு சிந்தைக்கு மிகுசுடர் விட்டொளிர்கிற ஆற்றலுக்கு, அவ்வளவு மகத்தான தன்னல மறுப்புக்கு சான்று கூறும் இந்த வாழ்க்கை புரட்சிகர இயக்கத்திற்கு ஆற்றியுள்ள சேவைகள் பொது மக்களின் முன்னால் விளம்பரபடுத்தப்படவுமில்லை. பத்திரிக்கைகளில் வெளிப்படுத்தப்படவுமில்லை. மற்றவர்களை மகிழ்ச்சியுறச் செய்வதிலிருந்து தான் மகிழ்ச்சியடையும் ஓர் அம்மையார் இருந்தார் என்றால் ‘அது சென்னி மார்க்சு’தான்..

இதைத் தொடர்ந்து மார்க்சின் நலம் குன்றிக் கொண்டே வந்தது சனவரி 21-ஆம் தேதி 1882-ஆம் ஆண்டில் மார்க்சும் ஏங்கல்சும் ‘கம்யூனிசக் கட்சியின் அறிக்கை’யின் உருசிய பதிப்புக்காக முன்னுரை எழுதினார்கள். இம்முன்னுரை உலகின் கவனத்தையும் நாட்டத்தையும் தம்பால் ஈர்த்தது. ஏனெனில் பல்வேறு வகையானப் போராட்டங்களை கடந்த பல ஆண்டுகளாக ஐரோப்பிய நாடுகள் பெற்றிருந்த போதிலும் நீடித்த நிலைத்த உறுதியான கம்யூனிச நெறிகள் வெற்றிபெறப் போவதற்கான சூழ்நிலை இரசிய நாட்டில்தான் உள்ளன என்பதை திட்டவட்டமாக அறுதியிட்டுத் தெளிவுறக் கூறியிருந்தனர். தங்களின் தத்துவ வித்துக்கள் முதன் முதல் இரசியாவில் விதைக்கப்பட்டுப் பயிராக்கப்பட்டு விளைச்சலைத் தரப் போகின்றன என்பதை ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலத்திற்கு முன்பே நுட்பமாக சிந்தித்து உணர்ந்திருந்தனர் இது இவர்கள் எவ்வளவு பெரிய அனுபவச் சித்தாந்த மேதை என்பதை விளக்குகின்றது பின்னர் தொடர்ந்து மார்க்சின் உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. நலந்தேடி அல்சீரியா பிரான்சு சுவிட்சர்லாந்து முதலிய நாடுகளுக்குச் சென்றார். கிடைத்த மருத்துவ உதவி ஓரளவே உடலைத் தேற்றியது

1883 சனவரி 11-ஆம் நாள் மார்க்சின் அளப்பரிய அன்புக்கும், ஆசைக்கும் உரிய மகளான சென்னிலொங்கே காலமானாள். இவள்தான் மார்க்சின் கட்டுரைகளை நகலெடுத்தவளும், தொடர்ந்து குறிப்பெடுத்தவளும் ஆவாள். இவள் உயிரோடே மார்க்சின் உயிரும பயணமாகியது என்றே கூறலாம். ஏற்கனவே மனைவியின் இறப்பால் நடைப்பிணமான மார்க்சு மகளிறந்த கவலையில் மேற்கொண்டு மருந்துண்ணவும் மறுத்தார்; மறந்தார். உடல்நலம் விரைந்து பாதிக்கப்படலாயிற்று இதனால் இரண்டு மாத கால அளவின் எல்லையில் இவருக்கு உறுதியாயிற்று இறுதி. 1883 மார்ச்சு 14-ஆம் தேதி பிற்பகல் 2-45 க்கு கார்ல் மார்க்சு என்னும் மாபெரும் உலகச் சிந்தனையாளன், ஏறத்தாழ மண்ணுலகம் தோன்றி வளர்ந்து வளர்ச்சியுற்ற கால அளவிற்கும் தோன்றியிராத, பொதுவுடைமைப் பாதையைச் சுட்டிக் காட்டிய ஒரே தலைவன் மார்க்சு இறந்தான். ‘மாயமானது உலகம்’ என்ற நீண்ட நெடிய கருத்தின் முதுகெலும்பைத் தேடிக் கண்டு பிடித்து அதனை அறிவுப் பூர்வமாக ஆராய்ச்சிப் பூர்வமாக விஞ்ஞான ரீதியாக விளக்கம தந்து ஒடித்த மாபெரும மனிதன் இறந்துபட்டான். உலகில் அவன்பெயர் தெரிந்த அனைவருமே அழுது புலமபினர் இவன் பிறந்த நாடும், வளர்ந்த நாடும், புகுந்த நாடும் இவனுக்குக் குடியுரிமைத் தர மறுத்தன இவனை அனாதையாக்கின. ஆனால் இவனுக்கெனக் கோடிக்கணக்கான மக்கள் புதிது புதிதாகத் தோன்றி வளர்ந்து உரிமைப் பாராட்டிக் கொண்டு வருகின்றார்கள்,

—தொடரும்

7-ம் பக்கத் தொடர்ச்சி

ஒன்பது கோள்களிலும் 'வியாழனும், வெள்ளியும் என்னநிலையில் உள்ளனர்' என்பதைக் கணித்து விட்டால் போதும்; மற்றவைகளைக் கணித்திடலாம் எளிதாக.

வியாழனுக்கும், வெள்ளிக்கும் பூசைகள் செய்து பத்தி, சத்தி, சித்தி......... அடைந்திட்டால்; மற்ற ஏழுபேரையும் துணையாகப் பெற்றுச் சிறக்க வாழ்ந்திடலாம்

'குருநிலையே ஒன்பது கோள்களின் இயக்கங்களையும் பயன்களையும் நிர்ணயிக்-கும்' இந்த இருவருக்கும் உரிய பூசாவிதிகள், அருளுறு பூசை மொழிகள்.....ஏராளம்! ஏராளம்! ஏராளம்! ஆனால், தக்க குருவின் வழியாகத்தான் இருவரையும் வணங்க வேண்டும். அதாவது, குருவே இட்டும், தொட்டும், சுட்டியும் விளக்கியருளி உதவி னால்தான் மேற்படி வியாழனையும், வெள்ளியையும் சித்தி செய்து கொள்ள முடியும்.

---

# முதல் விசயாலயனுக்கு வழங்கப்பட்ட திருவாசகம்

[பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியால் பிற்காலச் சோழப் பேரரசின் முதல் மன்னன விசயாலயனுக்கு வழங்கப்பட்டது]

மூன்று உகங்களிலும் சிறந்து விளங்கிய தமிழினம் எளிதில் பிறமண்ணினரான பிருமணரால் வீழ்த்தப்பட்டுத் தாழ்த்தப்பட்டுத் தொடர்ந்து ஆழ்த்தப்பட்டுக் கிடப்பதை முறையாகவும், நிறையாகவும் நினைத்துப் பார்த்துத் தொலைநோக்கோடு திட்டமிட்டுப் பலரையும்; தயாரித்து வாழையடிவாழையெனச் செயல்படச் செய்யும் தன்னலமற்ற துணிவுமிக்க தமிழர்கள் கலியுகத்தில் இருவேறு உலகத்திலும் தோன்றி ஒருசேரச் செயல்படவில்லை;— இதனை எண்ணிப்பார்த்துத்தான் அருட்பேரரசு அமைக்கும் முதலரசனாக உன்னை உருவாக்கியுள்ளோம் யாம்.

உண்மையான மொழிப்பற்றோ, இனப்பற்றோ, நாட்டுப்பற்றோ இல்லாதவர்-களே பெரும்பாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும், குறுக்குவழித் திறமையாலும், தமிழகச் சமய சமுதாய அரசியல் கலை இலக்கியத் துறைகளில் தலைவர்களாகிறார்கள். எனவே, இவர்கள் பேராசையும், பதவியாசையும், புகழாசையும் கொண்டு அனைத்துத் தமிழினத் துரோக விரோதங்களைச் செய்து தன்னல வெறித் தலைவர்களாக வாழ்ந்து சென்று விடுகிறார்கள். இவர்களை நம்பும் அப்பாவி மக்களும் 'இலவு காத்த கிளியாக' ஏமாந்திட்டனர்'—எனவே விசயாலயா உன்னை மக்கள் நம்புமாறு மொழியறிவும், ஆர்வமும், ஆற்றலும் குணநலப் போக்கும், நாட்டு நல நோக்கும் உடையவனாகவே எப்போதும் காத்துச் செயல்படக் கற்றிடு

இயற்கையாகவே தமிழன் உலகெங்கும் சுற்றித் திரிந்து புதியவர்களுடன் கலந்து பழகி வாழும் ஆர்வமும், ஆற்றலும் வாய்ப்பு வசதியும் நிறையப் பெற்றுப் பாரம்பரியமாக வளர்ந்தவன். எனவே இவன் எந்தப் புதியவர் வந்தாலும் வரவேற்று வாழவைக்கிறான் இதனால் தான், அன்னியர்கள் தொடர்ந்து தமிழனை அடிமைப் படுத்திடும் சதித்திட்டத்தால் சாதிவெறிகள், மதவெறிகள், வட்டாரவெறிகள், கிராமங்களுக்கிடையில்போட்டி, பொறாமைச்சண்டைகள்......முதலியவற்றை வளமாக வளர்த்துவருகின்றார்கள். இதனை வெல்ல வேண்டுமானால் பிருமணர், சீனர், யவனர், சோனகர் களப்பிறர்......முதலிய இனத்தவரோடு நுட்பமாகப் போரிடும் முறைகளை உருவாக்கினால் போதும்.

[தொடரும்]

## தமிழினத்தைக் காப்பாற்றக் கூடியது அரசியலுணர்ச்சியா? சமுதாய உணர்ச்சியா? சமய உணர்ச்சியா?

[உலக மார்க்சீய மாமேதை எம். பி. பிள்ளையின் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது]

தமிழர்களின் அரசியலுணர்ச்சி, நிறைந்த ஏட்டறிவையும், முறையான பட்டறிவையும், அநுபவமிக்க தன்னலமற்ற வீரத்தலைமையையும் பெற முடியாமல்; கூவம் ஆறு சாக்கடையாக மாறியது போல் வீணாகிவிட்டது. இன்று வரை அரசியலுணர்ச்சியைத் தன்னலமிக்க தலைவர்கள் தங்கள் தங்களின் வளவாழ்வுக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ளும் இழிநிலைதான் செழித்து வருகிறது. பொது மக்களுக்கு அரசியலறிவே [The political knowledge] ஏற்படாதவாறு பாதுகாப்பது தான் அரசியல்வாதிகளின் தலையாய தொண்டாக இருக்கிறது. எனவே, அரசியலுணர்ச்சியால் தமிழினத்தைக் காப்பாற்ற முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது!

தமிழினத்தின் சமுதாய உணர்ச்சி, முழுக்க முழுக்க மேல் நாட்டின் நாத்திகக் கருத்துக்களைத் திருடியவர்களின் தலைமையாலேயே வளர்க்கப்படுகிறது. மேலும், முறையான ஆராய்ச்சியோ, நிறைவான ஆதரவோ இல்லாத குருட்டுத்தனமும், முரட்டுத்தனமும் மிக்க வறட்டுப்போக்குடைய வெறியர்களே; பெரும்பாலும் தமிழினச் சமுதாய உணர்ச்சியை இயக்குபவர்களாக இருந்துவருகிறார்கள், எனவே, சமுதாய உணர்ச்சியின் பெயரால் நாத்திக வெறியும், பழமை மறுப்பும், மொழிப் பழிப்பும், நன்மை நல்கு தொன்மைமிகு இந்துமத அழிவும், அன்னியர்களிடம் அடிமையாதலுமே வளர்க்கப்படுகின்றன. இதனால், மிகமிகச் சிறிய ஒருசில கும்பல்களே சமுதாயச் சீர்த்திருத்தத்தின் பெயரால் பொழுது போக்குக் கலை நிகழ்ச்சிகள் நடத்திக் காலம் கடத்தும் அவலக்கேவல நிலைகள் தமிழினத்தில் வளர்ந்து விட்டன. எனவே, பெரும்பாலான மக்களின் மனதைப் புண்படுத்திடும் சிறு பிள்ளைகளின் விளையாட்டுப் போக்கில் வளர்க்கப்பட்டு வரும் சமுதாய உணர்ச்சியால்; தமிழினத்தைக் காப்பாற்ற முடியாது! முடியாது! முடியாது! முடியவேமுடியாது!

தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு...... என்பனவற்றை முறையான தத்துவங்களாலும், நிறைவான செயல் சித்தாந்தங்களாலும் ஆரம்பம் முதல் இறுதிவரை பண்படுத்திடும் சமய உணர்ச்சி; இலைமறைகாய் போல் வாழும் ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும், அருளாளர்களாலும், ஆன்மீகப் பேரறிஞர்களாலுமே கட்டிக் காக்கப்படுகின்றது. எனவே இந்தச் சமய உணர்சியின் விழிச்சியாலும், எழிச்சியாலும், கிளர்ச்சிமிகு வளர்ச்சியாலும், மலர்ச்சி மிகு செழிர்ச்சியாலுமே தமிழினத்தைக் காப்பாற்ற முடியும்! முடியும்! முடியும்!

தமிழினத்து அரசியல் வாதிகளும், சமுதாயவாதிகளும் ஏறத்தாழக் கண்மூடித் தனமாகத் தங்களின் தலைவர்களைப் பின்பற்றுகிறவர்களாகவே இருக்கிறார்கள். இதற்கு மேலாகத் தங்களின் இயக்கத்தின் கொள்கை (Policy and principle), குறிக்கோள் (aim), தத்துவம் (Philosophy), சித்தாந்தம் (Theology or way of approaches and attitudes) ,.........என்னவென்று தெரிந்து கொள்ளாமலேயே இயக்கங்களில் வெறியோடு ஈடுபடுபவர்களாகவே இருக்கிறார்கள், எனவே தான், பெரும்பாலும் அரசியல் தலைவர்களும், சமுதாயத் தலைவர்களும், சுயநல மிக்க சுக போக வாழ்வுக்குரிய சந்தர்ப்பவாதிகளாக ஏகபோக வாழ்வு வாழுகிறார்கள். இவர்களை விமர்சிக்க யாருக்குமே துணிவில்லை! துணிவில்லை! துணிவில்லை! துணிவேயில்லை! எனவே, தமிழினத்தின் அரசியலுணர்ச்சியும், சமுதாய உணர்ச்சியும் விரல் விட்டு எண்ணக் கூடிய தனிமனிதர்களின் இன்ப வாழ்வுக்கு மட்டுமே பயன்படக் கூடியவைகளாகத் தான் இருக்கின்றன. அதனால், தமிழினத்தின் அகப்பண்பாடாகவும், புற நாகரீகமாகவும் இருக்கின்றன மெய்யான இந்துமதத்திற்குரிய சமய உணர்ச்சியால் தான் தமிழினத்தைக் காப்பாற்ற முடியும்! காப்பாற்ற முடியும்! காப்பாற்ற முடியும்!

---

KVS பிரிண்டர்ஸ், பொன்னேரி